விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 4 செவ்வாய் 20.07.2021 மலர் - 2, இதழ் - 104

# இன்ஜினியரிங் படிப்புக்கு நுழைவுத் தேர்வு


விஜயபாரதம்

அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரான பாலகுருசாமி, முதல்வர் ஸ்டாலினுக்கு ஒருகோரிக்கைக்கடிதம்அனுப்பியுள்ளார். அதில், தமிழகத்தில் தற்போது 500க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஆண்டுக்கு 2 லட்சம் பேர் இன்ஜினியரிங் படிக்கின்றனர். ஆனால் அதில் 80 சதவீதம் பேர் படைப்பாக்க சிந்தனை, கள அறிவு வேலைவாய்ப்பு திறன் போன்றவற்றில் பின்தங்கியுள்ளதாக இந்திய தொழில் வர்த்தக சபை கூட்டமைப்பு (சி.ஐ.ஐ) தெரிவித்துள்ளது. தமிழகத்தில் தொழில் படிப்புகளில் சேருவதற்கான பொது நுழைவுத்தேர்வு முறை 2006ல் ரத்து செய்யப்பட்டது. இதனால் சமூக பொருளாதார கல்வி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் களையப்படவில்லை. மாறாக வசதியான மாணவர்கள் அதிக அளவில் தொழில் கல்வியில் சேர்கின்றனர். நுழைவு தேர்வு இல்லாமல் பிளஸ் 2 மதிப்பெண்ணுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பதால் பல பள்ளிகள் பயிற்சி மையங்களாக மாறிவிட்டன. பிளஸ் 2 பாடங்களை மனப்பாடம் செய்ய வைத்து மதிப்பெண் பெற வைக்கின்றனர். அதனால் மாணவர்களால் நீட், ஜே.இ.இ உள்ளிட்ட தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற முடிவதில்லை. எனவே, பள்ளி கல்வி முறையை சீரமைத்தல், தேர்வு முறையை சீராக்குதல், அரசு பள்ளிகளை தரம் உயர்த்துதல் போன்றவற்றால் தற்போது தரம் குறைந்து வரும் இன்ஜினியரிங் கல்வி முறையை மீட்கலாம். எதிர்காலத்தில் லட்சக்கணக்கான பொறியாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் சரியான வழி கிடைக்கும்' என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# அறநிலையத்துறையின் மகளிர் கல்லூரிகள்


விஜயபாரதம்

சென்னை எத்திராஜ் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, சென்னையில் அறநிலையத்துறை சார்பில், இரண்டு புதிய பெண்கள் கலைக் கல்லூரிகள் இந்த ஆண்டே தொடங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# வி.ஹெச்.பி. தீர்மானம்




விஜயபாரதம்

ஹரியானாவின் பாரிதாபாதில் நடந்து முடிந்த விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் இரண்டு நாள் மாநாட்டில், விஷ்வ ஹிந்து பரிஷத்தின் புதிய அகில உலக தலைவராக பத்ம ஸ்ரீ டாக்டர் ரவீந்திர நாராயண் சிங், செயல் தலைவராக அலோக் குமார், அகில உலக பொதுச்செயலாளராக மிலிந்த் பராண்டே ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், சில முக்கியத் தீர்மானங்களும் அப்போது நிறைவேற்றப்பட்டன. அதில் ஒன்றாக 'தமிழகம், கர்நாடகா உள்ளிட்ட பல மாநிலங்களில் அரசு கட்டுப்பாட்டின் கீழ் கோயில்கள் உள்ளன. அந்த கோயில்களில் யார் பூஜை செய்ய வேண்டும், எப்படி பூஜை செய்ய வேண்டும் உள்ளிட்டவற்றை, அரசு தீர்மானிக்கிறது. ஏன் அதனை அரசு தீர்மானிக்க வேண்டும்? அரசு கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கோயில்களை ஹிந்து அமைப்புகளிடம் ஒப்படைக்க வழிவகுக்கும் சட்டத்தை மத்திய அரசு உடனடியாக இயற்ற வேண்டும். அதை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதேபோல, வலுக்கட்டாய மதமாற்றத்தைத் தடுக்கும் கடுமையான சட்டத்தை மத்திய அரசு இயற்றவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது' என விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் செயல் தலைவர் அலோக் குமார் தெரிவித்தார்.

# தாய்மொழியில் தொழிற்கல்வி



விஜயபாரதம்

'புதிய கல்விக் கொள்கை இந்திய மொழிகளின் ஆய்வு' என்ற தலைப்பில் கர்நாடக பல்கலைக்கழகத்தின் அனைத்து மொழி ஆசிரியர்கள் சங்கம், ஒரு இணையவழிக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தது. அதில், கர்நாடக துணை முதல்வர் சி.என்.அஸ்வதா நாராயணா கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர், 'தேசிய கல்விக் கொள்கை (என்.இ.பி) அமல்படுத்தப்பட்ட பின்னர் பிராந்திய மொழி (தாய்மொழி) மேலும் பலப்படுத்தப்படும். இந்த விஷயத்தில் எந்த அச்சமும் இருக்கக்கூடாது. புதிய கல்விக் கொள்கை, பிராந்திய மொழிகளில் தொழில்முறை கல்வி வழங்குவதை வலியுறுத்துகிறது. அதற்கான நடவடிக்கைகளை அரசு ஊக்குவிக்கும். பிராந்திய மொழி, தொழில்நுட்பம் மற்றும் புதுமை, முன்னேற்றம் ஆகியவற்றுடன் இணைந்து அதற்கேற்ப செழித்து வளர வேண்டும். அது அனைத்துத் துறைகளிலும் இருக்க வேண்டும். வெளிநாட்டு மொழிகள் நம் தாய்மொழி மீது தாக்கம் ஏற்படுத்த தேசிய கல்விக் கொள்கை அனுமதிக்காது. படிப்புகள், பாடத்திட்டங்கள் நம் வல்லுனர்களால் வடிவமைக்கப்படும்' என கருத்து தெரிவித்தார்.

# சர்ச்சைக்குரிய முனாவர் ராணா



விஜயபாரதம்

உத்தர பிரதேசத்தை சேர்ந்த ஷயார் முனாவர் ராணா, சர்ச்சைக்குரிய கருத்துகளை அவ்வப்போது வெளியிடுபவர். அவ்வகையில், உத்தரப்பிரதேச அரசின் உத்தேச மக்கள்தொகைக் கொள்கை குறித்து கருத்து தெரிவித்த ராணா, 'முஸ்லிம்களுக்கு 8 குழந்தைகள் தேவை. எனவே, இந்த கொள்கை நல்லதல்ல. பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக இருவரை காவல்துறையினர் கைது செய்தால், இரண்டு பேர் கொரோனாவில் இறந்து விடுகின்றனர். மீதமுள்ள 4 பேர் வயதான பெற்றோரை பராமரிக்க இருப்பார்கள்' என ஒரு புது கருத்தை தெரிவித்துள்ளார். மேலும், 'யோகி ஆதித்யநாத் மீண்டும் முதல்வரானால் உ.பியை விட்டு வெளியேறுவேன். பா.ஜ.க வெற்றிபெற ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி காரணமாக இருப்பார்' என தெரிவித்தார். சில நாட்களுக்கு முன், இவரது மகனை இருவர் தாக்கினர் என்ற விவகாரம் பரபரப்பானது. அதனை காவல்துறை விசாரித்தபோது, சட்டமன்ற தேர்தலில் அரசியல் ஆதாயத்திற்காக நடத்தப்பட்ட நாடகம் அது என கண்டறியப்பட்டது. ராணாவின் அரசியல் சர்ச்சைகளுக்கு இது ஒரு உதாரணம் மட்டுமே.

# பசுமை பேருந்து சேவை




விஜயபாரதம்

கர்நாடகத்தில் கொரோனா பொதுமுடக்கத்தால் விவசாயிகள் விளைப்பொருட்களை விற்பனை செய்ய போக்குவரத்து வசதி இல்லாமல் அவதிப்பட்டனர். அதே சமயம், கர்நாடக அரசு போக்குவரத்து கழகமும் நஷ்டத்தை சந்தித்தது. இதனை ஈடுசெய்ய அம்மாநில போக்குவரத்துக் கழகம் சில புதிய யுக்திகளை புகுத்தி வருகிறது. அதில் ஒன்றாக, விவசாயிகளும் போக்குவரத்துக்கு கழகமும் பயனடையும் வகையில் 'பசுமை பேருந்து' சேவை துவக்கப்பட உள்ளது. இதன் மூலம் விவசாயிகள் குறைந்த செலவில் விளைபொருட்களை சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல முடியும். முதற்கட்டமாக இதற்காக 565 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டு இந்த சேவைக்கு பயன்படுத்தப்பட உள்ளன. விவசாயிகளின் விளை பொருட்களை கொண்டு செல்ல ரெயில்வே துறை ஏற்கனவே' கிசான் ரெயில்' சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளா புதிய திட்டம்



விஜயபாரதம்

கேரளாவில் முதல்வர் பினராயி விஜயன், 'கொரோனா பொதுமுடக்கக் காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. பெண்களை பாதுகாக்க 'பிங்க்' பாதுகாப்புத் திட்டம் ஜூலை 19 முதல் செயல்படுத்தப்படும்' என தெரிவித்தார். இந்த பிங்க் பாதுகாப்பு திட்டத்தில் பயிற்சி பெற்ற பெண் காவல் அதிகாரிகள் பணியாற்றுவர். இவர்கள், வரதட்சணை கொடுமை, பொது இடங்களில் பெண்களிடம் தவறாக நடந்துகொள்வது உள்ளிட்ட வன்முறை சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜவுளி அமைச்சகம் ட்ரோன் பயன்பாடு



விஜயபாரதம்

மத்திய ஜவுளி அமைச்சகம், தனது பயன்பாட்டில் இல்லாத, கண்காணிப்பில் இல்லாத அதன் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நடந்துள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறியவும், அகற்றவும், நிலங்களை பாதுகாக்கவும் நவீன டிரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஆரம்பித்து உள்ளது. சோமசுந்தரம் மில்ஸ், காலீஸ்வரா மில்ஸ், ஜே.ஏ.எம் மில்ஸ் உள்ளிட்ட சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னோடி ஆய்வுகள் திருப்திகரமாக இருந்தன. எனவே, இத்திட்டம் இனி தேசம் முழுவதும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதனால் ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு களையப்படும் என ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# உ.பியில் ஆலை அமைக்கும் பிர்லா



விஜயபாரதம்

உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதில் ஒன்றாக, அம்மாநிலத்தில் தொழில் முதலீட்டை ஈர்க்கும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதனால் அம்மாநிலம், தொழில் துவங்க உகந்த மாநிலங்கள் வரிசையில் தற்போது 2ம் இடத்திற்கு வேகமாக முன்னேறியுள்ளது. உ.பியில் ராணுவ தளவாட தயாரிப்பு தொழிற்சாலை வழித்தடத்தில் பல பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்கனவே முதலீடு செய்ய ஆரம்பித்துவிட்டன. தற்போது, ஆதித்திய பிர்லா நிறுவனம் 700 கோடி முதலீட்டில் தனது பெயிண்ட் உற்பத்தி தொழிற்சாலையை ஆரம்பிக்க ஒப்பந்தம் போட்டுள்ளது. இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களால் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 4 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

# தலிபான் ஆட்சியில் பெண்கள்



விஜயபாரதம்

ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் ஒரு செய்தியில், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் கைப்பற்றியுள்ள பகுதிகளில் 15 முதல் 45 வயதான திருமணமாகாத, விதவைப் பெண்கள் குறித்த விவரங்கள் இமாம்கள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. அந்த பெண்களை திருமணம் எனும் பெயரில் அழைத்துச் சென்று பாலியல் அடிமைகளாகவும் புதிய ஜிஹாதிகளை உருவாக்கும் வகையில், குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் இயந்திரமாகவும் அவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். போரில் ஒரு பயங்கரவாதி இறந்துவிட்டால் அவரது மனைவி கட்டாயமாக பாலியல் அடிமையாக்கப்படுகிறார். அவரது குழந்தைகள் அவரிடம் இருந்து பிரிக்கப்படுகின்றன. குழந்தை ஆணாக இருந்தால் ஜிஹாதி பயிற்சிக்கும் பெண்ணாக இருந்தால் விற்பனைக்கும் அனுப்பப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவில் கொரோனாவுக்கு அடுத்து ?



விஜயபாரதம்

சீனாவில் மகாக்ஸ் வகை குரங்குகளுக்கு உடற்கூறாய்வு செய்த கால்நடை மருத்துவர் ஒருவருக்கு சில மாதங்களுக்கு பின் வாந்தி, காய்ச்சல், நரம்பு பாதிப்பு உள்ளிட்ட நோய்களால் அவதிப்பட்டு மரணமடைந்தார். இவரது உடலில் 'குரங்கு பி' வைரஸ் தொற்று இருந்தது கண்டறியப்பட்டது. 'குரங்கு பி' வைரஸ் தாக்கி மருத்துவர் ஒருவர் பலியானது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வைரஸ் மகாக்ஸ் வகை குரங்குகளில் 1932ல் கண்டறியப்பட்டது. இது நேரடி கழிவுகள், சுரப்பிகள் மூலம் பரவும். இவ்வகை வைரசால் இறப்பு 70 முதல் 80 சதவீத உயிரிழப்பு ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பவர்கள், ஆய்வு மைய பணியாளர்கள் கூடுதல் பாதுகாப்புடன் இருக்கும்படி சீன நோய் கட்டுப்பாடு தடுப்பு மையம் அறிவுறுத்தியுள்ளது.

# தொழுகை நேரங்களில் கடை திறக்க அனுமதி



விஜயபாரதம்

இறை வழிபாட்டுக்காக முழு கவனத்துடன் நேரம் ஒதுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சௌதி அரேபியாவில் தொழுகை நடக்கும் நேரங்களில் கடைகளை அடைத்துவிடுவது பாரம்பரிய பழக்கம். ஆனால் கொரோனா தொற்று காரனமாக இந்த பழக்க வழக்கத்தை மாற்றியுள்ளது சௌதி அரசு. தொழுகை நேரங்களில் கடைகள் அடைக்கப்படுவதால் பொதுமக்கள் பொருட்கள் வாங்குததற்காக கடைகள் முன்பு நீண்ட வரிசையில் நின்று சிரமப்படுகின்றனர். இதன் காரணமாக கொரோனா தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, தொழுகை நேரங்களில் கடைகளை திறந்து வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்படுவதாக சௌதி இளவரசர் முகமதுபின் சல்மான் அறிவித்துள்ளார். இது சௌதி அரேபியாவில் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகை செய்யும் என அங்குள்ள மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.




# சாதிக்கும் பெண்கள்

விஜயபாரதம்

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, தனது கணவரிடமிருந்து பிரிந்த ஆஷா, வறுமையின் துயரப்பிடியில் இருந்தார். அந்த வறுமையிலும் தனது இரண்டு குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை சுமந்துகொண்டு பட்டப்படிப்பை முடித்தார். ஆர்ஏஎஸ் தேர்வு அந்த நேரத்தில் தனது குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ஜோத்பூரில் கிடைத்த தூய்மை பணியாளர் வேலையை ஏற்றுக்கொண்டார். தினமும் ஜோத்பூர் நகர வீதிகளை சுத்தம் செய்தபடி குடும்பத்தை காப்பாற்றிக்கொண்டு ஆர்ஏஎஸ் தேர்வுக்கு விடாமல் படித்தார். ராஜஸ்தான் நிர்வாக சேவைத் தேர்வில் ( RAS) கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு கலந்து கொண்டார் ஆஷா. கொரோனா காரணமாக தேர்வு முடிவுகள் இரண்டு வருடம் கழித்து தற்போது வெளியாகி உள்ளது. இதில் ஆஷா தேர்ச்சி பெற்றுள்ளார். அவருக்கு துணை கலெக்டர் பதவி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் துணை கலெக்டராக பொறுப்பேற்க உள்ளார். இது குறித்து ஆஷா கூறுகையில், ‘என்னுடைய கடின உழைப்பின் விளைவாகவே இது நடந்தது என்று நம்புகிறேன். நான் ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியாக ஆக விரும்பினேன். ஆனால் வயது தொடர்பான கட்டுப்பாடுகள் காரணமாக ஐ.ஏ.எஸ் தேர்வில் கலந்து கொள்ள முடியவில்லை. எனக்கு கிடைத்த இந்த புதிய தகுதி மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதே என் நோக்கம்’ என்று கூறியுள்ளார் ஆஷா.

மற்றொரு நிகழ்வாக, கேரளாவைச் சேர்ந்த அனி சிவா என்ற கணவனால் கைவிடப்பட்ட பெண், திருவனந்தபுரம் மாவட்டத்தில் துணை கண்காணிப்பாளராக அண்மையில் பொறுப்பேற்றார். அதற்காக தனக்கு எதிராக மலைபோல் குவிந்துஇருந்தஅனைத்துகஷ்டங்களையும்வென்றுசாதித்தார். ஐஸ்கிரீம் விற்றார் காவல்துறை அதிகாரியாக விரும்பிய ஆனி சிவாவை, கைக்குழந்தையுடன் இருக்குபோதே அவரது கணவர் கைவிட்டார். அதன்பிறகு, சோப்பு, சோப்புத்தூள், ஐஸ்கிரீம் விற்று தன் வாழ்க்கையை நடத்தினார். இந்த பணிகளை செய்து கொண்டே சமூகவியலில் பட்டம் பெற்றார். பின்னர், 2019 ஆம் ஆண்டில், காவல் துறை அதிகாரியாக வேண்டும் என்று கனவுகளுடன் அதற்கும் தயாரானார். ஒன்றரை ஆண்டுகள் கடின முயற்சியின் விளைவாக திருவனந்தபுரத்தில் துணை ஆய்வாளராக தற்போது பொறுப்பேற்றுள்ளார் அனிசிவா. அவமானங்களை உரமாக்கி முயற்சி செய்தால் சாதனைகள் கண்டிப்பாக சாத்தியமாகும் என்பதற்கு இந்த பெண்கள் சிறந்த உதாரணம்.

# உலக சதுரங்க தினம்





விஜயபாரதம்

குப்தர்கள் ஆட்சி காலமான ஆறாம் நூற்றாண்டில்தான் பாரதத்தில் முதன் முதலில் 'சதுரங்கம்' எனப்படும் 'செஸ்' தோன்றியதாகக் கூறப்படுகிறது. ஆனால், கடந்த மே 12, 2019ல் குஜராத்தின் லோதலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு சதுரங்கப் பலகை, சிந்து சமவெளி நாகரிகத்தைச் சேர்ந்தது என்றும் கிமு 2300க்கு முந்தையது எனவும் கூறப்படுகிறது. 'சத்ரங்' என்ற பெயரில் தோன்றிய இந்த விளையாட்டு மெதுவாக வளர்ந்து, 9ம் நூற்றாண்டில் ரஷ்யாவில் நுழைந்தது. 15 ம் நூற்றாண்டில் அது ஐரோப்பாவில் பரவி காலூன்றியது. அங்கு பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டது. பிறகு, அங்கிருந்து உலகமெங்கும் பரவியது. முதன் முதலில் செஸ் எப்படி விளையாட வேண்டும் என்பதற்கான் புத்தகம் எழுதிய பெருமை லூயிஸ் ராமிரேஸ் என்ற ஸ்பெயின் நாட்டவரையே சேரும். அவருடைய Repetition of Love and the Art of Playing Chess என்ற புத்தகம் இன்றளவிலும் போற்றப்படுகிறது.

உலகளவிலான செஸ் போட்டி 1851ம் ஆண்டு லண்டனில் நடைபெற்றது. இதில் ஜெர்மனியைச் சேர்ந்த அடால்ப் ஆண்டர்சன் என்பவர் வெற்றி பெற்றார். இரண்டாம் உலகப் போருக்கு பின் நிறைய உலகப் போட்டிகள் நடத்தப்பட்டன. உலக செஸ் பெடரேஷன் (FIDE) 20 ஜூலை 1924ல் தொடங்கப்பட்டது. இதனை நினைவுகூறும் விதமாகவே இன்று உலக செஸ் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

மற்ற விளையாட்டுகளைவிடச் சதுரங்க விளையாட்டு சற்றே நுட்மானது. மூளைக்கும் கற்பனை ஓட்டத்துக்கும் வேலை கொடுத்து விளையாட வேண்டிய விளையாட்டு. புதிர்களுக்கு விடை காண்பது போல நுட்பத்துடன் விளையாடினால்தான் வெற்றி கிட்டும். பொதுவாக 'விளையாட்டு நாள்' என்பது உலகில் பல நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு 'விளையாட்டுக்காகவே ஒரு நாள்' என தனியாகக் கடைப்பிடிக்கப்படுவது அரிது. சதுரங்க விளையாட்டுக்கு அந்தப் பெருமை உண்டு.

கொரோனா பொதுமுடக்கம் தொடங்கியது முதலே ‘இண்டோர் கேம்ஸ்’ என்று சொல்லப்படும் உள்ளரங்க விளையாட்டுகளுக்கு மக்கள் மத்தியில் மவுசு கூடியது. அவற்றில் ‘செஸ்’ எனப்படும் சதுரங்க விளையாட்டு முக்கிய இடத்தைப் பிடித்ததாக ஐ.நா சபையின் இணையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோபாலகிருஷ்ணன்

# நிலவில் மனிதன் காலடி வைத்த தினம் இன்று



விஜயபாரதம்

புவியிலிருந்து 2,40,000 மைல்கள் தொலைவில் உள்ளது நிலா. அறிவியல் பூர்வமாகப் பார்த்தால், நிலவானது உயிர் வாழ்க்கைக்குத் தகுதியற்ற, வறண்ட துணைக்கோள் அவ்வளவுதான். ஆனால், மனிதர்கள் என்றும் எதனுடனும் திருப்தியடைந்து விடுவதில்லை. அதிலிருந்து தங்கள் கற்பனைகளை விரித்துக்கொண்டே செல்பவர்கள். அந்த வகையில், நிலவு மனிதனின் பிரக்ஞையில் ஆழமாக ஊடுருவியுள்ளது. அதனால்தான், நிலவை பற்றிப் பாடாத புலவர்களோ கவிஞர்களோ இல்லை, அதனை மேற்கோள் காட்டாத இலக்கியங்கள் இல்லை. விரும்பாத மனிதர்களே இல்லை எனலாம். ஆனால் நாளடைவில், அமெரிக்கா ரஷ்யாவுக்கு இடையே நிகழ்ந்த பனிப்போர் விளைவாக, அந்த அழகு நிலா, கௌரவத்தின் சின்னமாக பார்க்கப்பட்டது.

1957 அக்டோபர் 4ல் 'ஸ்புட்னிக் I' என்ற உலகின் முதல் செயற்கைக்கோளை, சோவியத் யூனியன் விண்ணுக்கு அனுப்பி சாதனை படைத்தது. 1961ல் அமெரிக்கா தனது முதல் செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பியது. பின் சோவியத் யூனியனும், அமெரிக்காவும் தங்கள் பலத்தை நிரூபிக்க போட்டி போட்டு நிலவுக்கு விண்கலத்தை அனுப்பின. இதில், 1969ல் அமெரிக்கா, நிலவுக்கு மனிதனை அனுப்பி சாதனை படைத்தது.

நிலாவில் நீல் ஆம்ஸ்ட்ராங் காலடி வைத்து இன்றுடன் 52 ஆண்டுகள் நிறைவடைகிறது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில், 'நாசா' விண்வெளி மையத்தின் சார்பில் 1969 ஜூலை 16ல் அப்பல்லோ II என்ற விண்கலம் நிலவுக்கு பயணமானது. இதில் கமாண்டர் நீல் ஆம்ஸ்டிராங், பைலட் மைக்கேல் கோலின்ஸ், பைலட் எட்வின் ஆல்ட்ரின் ஆகிய மூன்று விண்வெளி வீரர்கள் பயணித்தனர்.

இந்த விண்கலம் ஜூலை 20ல் இந்திய நேரம் நள்ளிரவு 12.48 மணிக்கு நிலவில் இறங்கியது. நீல் ஆம்ஸ்டிராங், விண்கலத்தில் இருந்து இறங்கி நிலவில் காலடி வைத்தார். இதன் அடையாளமாக அமெரிக்காவின் தேசியக் கொடியை நிலவில் பறக்க விட்டார். பின்னர் எட்வின் ஆல்ட்ரின் நிலவில் இறங்கினார். மொத்தம் 195 மணி,18 நிமிடம், 35 வினாடிகள் இந்த பயணம் நீடித்தது. 8 நாட்களுக்கு பின், ஜூலை 24ல், கொலம்பியாவில் வெற்றிகரமாக இந்த விண்கலம் தரை இறங்கியது. அப்பல்லோ II விண்கலத்தை தயாரிக்க 6 ஆண்டுகளும் 20 பில்லியன் டாலர் செலவும் ஆனது.

பச்சையப்பன்

# வலையில் சிக்கிய மீம்கள்







ஐயோ, கொரோனாவில் இறந்த மக்களோட
இறுதி சடங்கு போட்டோவ வித்து உலக அளவில்
பேமஸ் ஆன டேனிஸ் இறந்து போய்ட்டாரே
:ஓம் ஷாந்தி, சரி எப்பிடி இறந்தார்?
Fervid Indian
அங், அது வேணாம் அது வேணாம்,
அப்புறம் சிறுபான்மை மனசு புண்பட்டுரும்!


இதுக்கு மேல நடுநிலையா கருத்துக் கணிப்பு எடுக்க முடியாதுன்னா பாத்துகிடுங்க!!!
?
சிறந்த முதல்வர் யார்?
2
1
3